ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது ? அந்த குத்தகை காலம் முடிந்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அந்த ரோலிங் மில்லுக்கு 1—7—1972 முதல் 30—6—1977 முடிய 5 ஆண்டு காலத்திற்கு, ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. குத்தகை முடிவடைந்த பின் நிலம் ஒப்படை செய்யப்படவில்லை. ஆகவே, சேலம் கூடுதல் சபார்டினேட் ஜட்ஜ் வழக்குமன்றத்தில் தாவா தொடரப்பட்டிருக்கிறது. அந்த தாவா நிலுவையில் உள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன கருணா ஸ்டீல் ரோலிங் மில் சம்பந்தப்பட்ட இடம் ஏற்கெனவே அறநிலையத் துறையால் அனுமதிக்கப்பட்டு, அங்கே பெர்மனண்டாக தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அங்கே அந்த மில் தொடர்ந்து இயங்குகின்ற காரணத்தால் அந்த நிலத்தின் 'லீஸ்' காலத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே என்னிடத்தில் கேட்கப்பட்டிருக்கிற கேள்வி, உத்தமசோழபுரத்தில் இருக்கும் சுரபுரநாதசுவாமி கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர்? அதிலே ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களா என்பது. அதற்கு பதில் அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இந்த கருணா ஸ்டீல் ரோலிங் மில்லைப்பற்றிய குறிப்புகள் தெரிந்திருக்கின்றன என்று தெரிய வருகிறது. அதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டபோது 5 ஆண்டு குத்தகை என்றுதான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. குத்தகை ஒப்பந்தம் செய்கிறபோது, குத்தகை முடிந்த பின்னால் நிலத்தை திருப்பித் தந்துவிட வேண்டுமென்று விதிகள் போடப்படுவதுதான் வழக்கம். ஆகவே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருகிற விவரத்தின்படி நிரந்தரமாக அந்த இடத்தை அவர்களுக்கே பராதீனம் செய்து கொள்ள விதிகள் இருக்கிறதா என்பது தெரியவில்லை. அப்படி இருந்தால் வழக்கு மன்றத்திற்கு அறநிலைய நிர்வாகிகள் போயிருக்க முடியாது.

சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி.

*வினா எண். 530— திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நிரந்தரமாக ஒரு பொருட்காட்சி ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தீவுத் திடலில் நிலையான பொருட்காட்சி அமைப்பதற்கு 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு (Token Provision) ரூ. 1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு மற்றும் திட்ட விவரங்களை அரசுக்கு அளிக்குமாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரமான பொருட்காட்சி அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். 1978 ஆம் ஆண்டு தீவுத் திடலில் நடைபெற்ற பொருட்காட்சியில் மின்சார வேலைகள் சம்பந்தமாக காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? 1981 ஆம் ஆண்டு அதாவது இப்போது நடந்து முடிந்ததே அந்தப் பொருட்கட்சிசாலையில் மின்சார வேலைக்கான காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி தீவுத் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைப்பது பற்றியது. அதற்கான தகவலைச் சேகரித்து விடையளித்திருக்கிறேன். வேறு விவரங்களை அவர்கள் பெற வேண்டும் என்றால் அதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்குதல்.

*வினா எண். 531—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம் வத்திராயிருப்பு பிர்க்காவிலுள்ள பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) மேற்படி செயற்குறிப்பின் முழு விவ்ரம் என்ன ?

(இ) மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வருகிறது ?